RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 299 | அக்டோபர்.30 2025 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## ரபேல் போர் விமானத்தில் பயணித்தார் ஜனாதிபதி திரவுபதி முர்மு

சண்டிகர்: அக்.30-

ஹரியானாவின் அம்பாலா விமானப்படை தளத்திலிருந்து ரபேல் போர் விமானத்தில் ஜனாதிபதி திரவுபதி முர்மு பயணித்தார்.

ஹரியானாவின் அம்பாலா விமானப்படை தளத்திற்கு இன்று (அக் 29) ஜனாதிபதி திரவுபதி முர்மு வருகை தந்தார். அவருக்கு அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. அதனை அவர் ஏற்றுக்கொண்டார். பின்னர் அவர் ரபேல் போர் விமானத்தில் பயணம் செய்தார். ரபேல் விமானத்தில் ஜனாதிபதி திரவுபதி முர்மு பயணம் செய்த வீடியோ வெளியாகி உள்ளது.

பிரான்ஸ் நாட்டை சேர்ந்த விண்வெளி நிறுவனமான டசால்ட் ஏவியேஷன் தயாரித்த ரபேல் போர் விமானங்கள், செப்டம்பர் 2020ல் அம்பாலாவில் உள்ள விமானப்படை நிலையத்தில் இந்திய விமானப்படையில் முறையாக சேர்க்கப்பட்டன.

ஏப்ரல் 22ம் தேதி நடந்த கொடூரமான பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்கு பதிலடியாக இந்தியாவால் தொடங்கப்பட்ட ஆப்பரேஷன் சிந்தூரின் போது ரபேல் ஜெட் விமானங்கள் பயன்படுத்தப்பட்டன. பின்னர் ரபேல் போர் விமானத்திற்கு மவுசு கூடியது.

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கை யை போது ரபேல் போர் விமானத்தின் பங்கு முக்கியத்துவமாக இருந்ததால், செய்திகளில் பரபரப்பாக பேசப்பட்டது. இவ்வளவு சிறப்பு வாய்ந்த ரபேல் போர் விமானத்தில் ஜனாதிபதி திரவுபதி முர்மு இன்று பயணம் செய்து இருக்கிறார்.

ஏற்கனவே, 2023ம் ஆண்டு அசாமின் தேஜ்பூர் விமானப் படைத்தளத்தில் இருந்து சுகோய் 30 ரக போர் விமானத்தில் திரவுபதி முர்மு பயணம் செய்துள்ளார். முன்னாள் ஜனாதிபதிகள் ஏபிஜே அப்துல் கலாம் மற்றும் பிரதிபா பாட்டீல் ஆகியோர் சுகோய்30 எம்கேஐ போர் விமானங்களில் பயணம் செய்து இருக்கின்றனர்.

இதனால், சுகோய்30 எம்கேஐ போர் விமானத்தில் பறந்த மூன்றாவது ஜனாதிபதி மற்றும் இரண்டாவது பெண் நாட்டுத் தலைவர் ஆனார். தற்போது 2 வது முறையாக போர் விமானத்தில் திரவுபதி முர்மு பயணம் செய்து உள்ளார்.






# இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிக்கையின் படி, சேலம் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரதிருத்த பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதையொட்டி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் உடனான ஆலோசனை கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். இரா.பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்றது

சேலம், அக்.30-

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிக்கையின் படி, சேலம் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரதிருத்த பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதையொட்டி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் உடனான ஆலோசனை கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (29.10.2025) மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது. இதுகுறித்து மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். இரா.பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

சேலம் மாவட்டத்தில் உள்ள 11 சட்டமன்ற தொகுதிகளில் உள்ள 81.கெங்கவல்லி சட்டமன்ற தொகுதியில் 264 வாக்குச் சாவடிகளில் 1,13,762 ஆண் வாக்காளர்களும், 1,20,383 பெண் வாக்காளர்களும், 9 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 2,34,154 வாக்காளர்களும், 82.ஆத் தூர் சட்டமன்ற தொகுதியில் 284 வாக்குச்சாவடிகளில் 1,18,749ஆண் வாக்காளர்களும், 1,26,882 பெண் வாக்காளர்களும், 24 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 2,45,655 வாக்காளர்களும், 83. ஏற்காடு சட்டமன்ற தொகுதியில் 318 வாக்குச் சாவடிகளில் 1,40,088 ஆண் வாக்காளர்களும், 1,47,537 பெண் வாக்காளர்களும், 17 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 2,87,642 வாக்காளர்களும்,

84. ஓமலூர் சட்டமன்ற தொகுதியில் 346 வாக்குச்சாவடிகளில் 1,55,878 ஆண் வாக்காளர்களும், 1,50,232 பெண் வாக்காளர்களும், 20 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 3,06,130 வாக்காளர்களும், 85.மேட்டூர் சட்டமன்ற தொகுதியில் 316 வாக்குச் சாவடிகளில் 1,41,839 ஆண் வாக்காளர்களும், 1,40,270 பெண் வாக்காளர்களும், 20 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 2,82,129 வாக்காளர்களும், 86. எடப்பாடி சட்டமன்ற தொகுதியில் 325 வாக்குச்சாவடிகளில் 1,48,104 ஆண் வாக்காளர்களும், 1,45,617 பெண் வாக்காளர்களும், 28 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 2,93,749 வாக்காளர்களும்,

87. சங்ககிரி சட்டமன்ற தொகுதியில் 315 வாக்குச்சாவடிகளில் 1,38,657 ஆண் வாக்காளர்களும், 1,37,219 பெண் வாக்காளர்களும், 25 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 2,75,901 வாக்காளர்களும், 88.சேலம் மேற்கு சட்டமன்ற தொகுதியில் 296 வாக்குச்சாவடிகளில் 1,53,224 ஆண் வாக்காளர்களும், 1,55,581 பெண் வாக்காளர்களும், 87 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 3,08,892 வாக்காளர்களும், 89. சேலம் வடக்கு சட்டமன்ற தொகுதியில் 262 வாக்குச்சாவடிகளில் 1,33,003 ஆண் வாக்காளர்களும், 1,40,915 பெண் வாக்காளர்களும், 53 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 2,73,971 வாக்காளர்களும்,

90. சேலம் தெற்கு சட்டமன்ற தொகுதியில் 239 வாக்குச்சாவடிகளில் 1,24,752 ஆண் வாக்காளர்களும், 1,31,351 பெண் வாக்காளர்களும், 63 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 2,56,166 வாக்காளர்களும், 91.வீரபாண்டி சட்டமன்ற தொகுதியில் 299 வாக்குச்சாவடிகளில் 1,33,040 ஆண் வாக்காளர்களும், 1,33,088 பெண் வாக்காளர்களும், 20 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 2,66,148 வாக்காளர்களும் என



மொத்தம் 11 சட்டமன்ற தொகுதிகளில் 3,264 வாக்குச்சாவடிகளில் 15,01,096 ஆண் வாக்காளர்களும், 15,29,075 பெண் வாக்காளர்களும், 366 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 30,30,537 வாக்காளர்களும் உள்ளனர்.

இந்திய அரசியலமைப்பின் 324 வது பிரிவு மற்றும் 1950ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப் பிரிவு 21 மற்றும் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1950 ன் பிற பொருந்தக்கூடிய பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி 01.01.2026 ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தத்தினை இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதன்படி முன்னேற்பாடுகள் பயிற்சி/ அச்சடித்தல் 28.10.2025 (செவ்வாய் முதல் 03.11.2025 (திங்கள்) வரையிலும், கணக்கீட்டிற்கான காலம் 04.11.2025 (செவ்வாய்) முதல் 04.12.2025 (வியாழன்) வரையிலும், வாக்குச்சாவடி நிலையங்களை மறுசீரமைத்தல்/ திருத்தியமைத்தல் 04.12.2025 (வியாழன்) க்குள்ளும், கட்டுப்பாட்டு அட்டவணையை (Control Table) மேம்படுத்துதல் மற்றும் வரைவுப் பட்டியலைத் தயாரித்தல் 05.12.2025 (வெள்ளி) முதல் 08.12.2025 (திங்கள்) வரையிலும்,

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாள் 09.12.2025 (செவ்வாய்) அன்றும், ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் விண்ணப்பிக்கும் காலம் 09.12.2025 (செவ்வாய்) முதல் 08.01.2026 (வியாழன்) வரையிலும், அறிவிப்பு கட்டம் (வழங்கல், விசாரணை மற்றும் சரிபார்ப்பு) கணக்கீட்டு படிவங்கள் மீதான முடிவுகள் மேற்கொள்ளுதல் மற்றும் ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் மீதான தீர்வு காணுதல் ஆகியவை ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்பட்டு, இவை அனைத்தும் வாக்காளர் பதிவு அலுவலரால் முடிக்கப்பட வேண்டிய தேதி 09.12.2025 (செவ்வாய்) முதல் 31.01.2026 (சனி) வரையிலும், இறுதி வாக்காளர் பட்டியலின் தர அளவுகளை சரிபார்த்தல் மற்றும் இறுதி வெளியீட்டிற்கு ஆணையத்தின் ஒப்புதலைப் பெறுதல் 03.02.2026 (செவ்வாய்) க்குள்ளும், இறுதி வாக்காளர் பட்டியல் 07.02.2026 (சனிக்கிழமை) அன்று வெளியிடப்படும் என அறிவித்துள்ளது.

மேற்படி இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, சேலம் மாவட்டத்தில் நடைபெற உள்ள சிறப்பு தீவிரத் திருத்தத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் சார்பாக அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்குச்சாவடி நிலை முகவர்களை நியமனம் செய்து வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுடன் மேற்படி வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளில் ஒருங்கிணைந்து ஒத்துழைப்பு நல்குமாறும் பொதுமக்கள் தங்கள் பகுதிகளுக்குட்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர் அளிக்கும் கணக்கீட்டுத்தாள் படிவத்தில் தங்கள் பெயர் 2002/2005 ஆம் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருந்த விவரத்தினை சரிபார்த்து, பூர்த்தி செய்து படிவங்களில் கையொப்பமிட்டு அவரிடம் வழங்க வேண்டும்.

இதற்கான 2002 ஆம் ஆண்டு பட்டியல் மற்றும் 2005 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் பட்டியல் பொதுமக்கள் எளிதில் தங்கள் பெயர் விவரங்களை சரிபார்க்கும் விதமாக voters.eci.gov.in என்ற இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி புதிய வாக்காளர்களாக பெயர் சேர்க்க விரும்புபவர்கள் தங்கள் பகுதிகளுக்குட்பட்ட BLO-க்களிடம் படிவம் 6ஐ நேரடியாகவும் வழங்கலாம். பொதுமக்கள் ஏதேனும் சந்தேகம் இருப்பின் தங்கள் பகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலரையோ (BLO) அல்லது வாக்குப்பதிவு அலுவலர் மற்றும் உதவி வாக்குப்பதிவு அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்படும் தீவிர திருத்தம் சிறப்பு உதவி மையத்தினை 1950என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு விவரத்தினை தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.



## பழனியில் முத்துராமலிங்கனாரின் திருவுருவ சிலைக்கு மாநில பொது செயலாளர் சபரி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை

திண்டுக்கல், அக்.30-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் உள்ள முத்துராமலிங்க தேவரின் 118 வது குருபூஜையை முன்னிட்டு தென்னிந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் சபரி தலைமையில் முத்துராமலிங்கனாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து விட்டு கட்சி நிர்வாகிகள் உடன் ஊர்வலமாக பசும்பொன் நோக்கி சென்றனர்.

தொடர்ந்து கட்சி நிர்வாகிகள் அனைவரும் நகரின் முக்கிய வீதிகள் வழியாக வலம் வந்து அடிவாரம் பகுதியில் உள்ள முத்துராமலிங்கனாரின் திருவுருவ சிலை முன்பு பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு தென்னிந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் மாநில பொது செயலாளர் சபரி முன்னிலையில் அனைவரும் முத்துராமலிங்கனாரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

மேலும் முத்துராமலிங்கனரின் குருபூஜையை முன்னிட்டு கட்சி கொடிகளை ஏந்தியவாறு வாகனங்களில் அணிவகுத்து அனைவரும் பசும்பொன் நகரை நோக்கி சென்றனர்.

## வருகின்ற 1.1.2026ஆம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு, வாக்காளர் பட்டியல்களில் சிறப்பு தீவிர திருத்த பணி மேற்கொள்ளப்படவுள்ளதால், பொதுமக்கள் உரிய முறையில் பயன்படுத்தி கொள்ள வேண்டும்

### மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, அக்.30-

இந்தியத் தேர்தல் ஆணையம், வருகின்ற 1.1.2026ஆம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு, சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொண்டு வாக்காளர் பட்டியல்கள் தயாரிக்க உள்ளது.

அந்த வகையில், சிவகங்கை மாவட்டத்தில் வருகின்ற 4.11.2025 முதல் 4.12.2025 வரை சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் (BLO), வாக்காளர் கணக்கெடுப்புப் பணி மேற்கொள்ளப்படவுள்ளது. அவ்வாக்காளர் கணக்கெடுப்பின் போது, தற்போதய நாள் வரை வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள அனைத்து வாக்காளர்களுக்கும் சுய விபரங்கள் பகுதியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள கணக்கெடுப்புப் படிவங்கள் இரட்டைப் பிரதிகளில் வழங்கப்படவுள்ளது. வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் திரும்பப் பெறப்படும், பூர்த்தி செய்யப்பட்டுள்ள படிவங்களின் அடிப்படையில், வரைவு வாக்காளர் பட்டியல் வருகின்ற 9.12.2025 அன்று சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலர்களால் வெளியிடப்படவுள்ளது.

மேலும், வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெறாத வாக்காளர் களகளுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கிடும் வகையில், வருகின்ற 9.12.2025 முதல் 8.1.2026 வரை நேர்வுக்கேற்ப படிவம் 6 / படிவம் 8 ஆகியவற்றை சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலர்களிடம் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெறாத வாக்காளர்கள் சமர்ப்பிப்பகலாம். 2

மேற்கண்ட காலத்தில் பெறப்படும் மனுக்களின் இறுதி விசாரணையின் அடிப்படையில், வாக்காளர் பதிவு அலுவலர்களால் வருகின்ற 7.02.2026 அன்று இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படவுள்ளது.

வருகின்ற 4.11.2025 முதல் 4.12.2025 வரை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று கணக்கெடுப்புப் படிவங்களை வாக்காளர்களுக்கு வழங்கி, பூர்த்தி செய்த கணக்கெடுப்புப் படிவங்களை சேகரிக்க உள்ளானர். மேலும், வாக்காளர்கள் https:// voters.eci.gov.in என்ற வலைதளத்தின் வாயிலாக தங்களது சுய விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

எனவே, தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியலை 100 சதவீதம் சரியாக தயாரிப்பதற்கும், வாக்குச்சாவடி நிலை அலுவலர்களது கள விசாரணையின் போது பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும். மேலும், பொதுமக்கள் இவ்வாய்ப்பினை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு வாக்காளர் பட்டியலில் திருத்தம் மேற்கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.





## தாம்பரம் மாநகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில்

## 1-வது மண்டலம் 1 முதல் 14 வார்டு மக்களுக்கான சிறப்புக் கூட்டம்

தாம்பரம், அக்.30-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் 1வது மண்டல பகுதி மக்களுக்கான சிறப்புக் கூட்டம் ஒன்று முதல் 14 வார்டுகளில் அந்தந்த பகுதி வார்டு மாமன்ற உறுப்பினர்கள் தலைமையில் சிறப்பு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு அந்தந்த வார்டு பொதுமக்கள் பொது நல சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டு குடிநீர், தெரு விளக்குகள், குப்பை, சாலைகள், பூங்காக்கள், மழைநீர் வடிகால்வாய்கள், பாதாள சாக்கடை பராமரிப்பு சீர்செய்ய வேண்டும் என பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினர்,

இக் கூட்டத்தில் கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமனோர் கலந்து கொண்டனர்

## பத்திரம் காணவில்லை

ம.பாஸ்கர் ராஜ் த.ப.மணி, 1672/B, அழகு மெய்ஞானபுரம், வண்டவாசி ரோடு சிவகங்கை 630561 என்ற முகவரியில் வசித்து வரும் ம.பாஸ்கர் ராஜ் என்பவர் கடந்த (8/10/2025) அன்று காலை 7 மணியளவில் மேற்கண்ட முகவரியில் இருந்து சிவகங்கை பேருந்து நிலையத்திற்கு தனது இரு சக்கர வாகனத்தில் செல்லும் போது எனது அசல் பத்திரம் (3623/2016)தவறி விழுந்து விட்டது என்னுடைய பத்திரம் சிவகங்கை சார் பதிவாளர் 2.அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பத்திரம் காணவில்லை.

அது யார் கையில் கிடைக்கப் பெறும் பட்சத்தில் கீழ்க்கண்ட முகவரி அல்லது அலைபேசி எண்ணிற்கு அழைத்து வழங்குமாறு கேட்டுச்கொள்கிறேன்

Online compliant Number: CAM 25523158/2025 புகார் செய்யப்பட்டுள்ளது.

**ம.பாஸ்கர் ராஜ்**
த.ப.மணி,
1672/8, அழகு மெய்ஞானபுரம்,
வண்டவாசி ரோடு,
சிவகங்கை 630 561.
Ph.No: 8300000686
8072849489

## ஆணவக் கொலை தடுப்புகான சட்டம் ஏற்ற ஆணையம் அமைத்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் பாராட்டு விழா

தாம்பரம், அக்.30-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் திராவிடர் கழகம் சார்பில் தமிழ்நாடு சட்டப்பேரவை முன்னாள் தலைவர் முனு ஆதி அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் ஆணவக் கொலை தடுப்புகான சட்டம் ஏற்ற ஆணையம் அமைத்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பாராட்டு விழா மேற்கு தாம்பரம் ராஜகோபால் திருமண மண்டபத்தில் நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மாவட்ட திராவிட கழகம் தலைவர் பா.முத்தையன் வரவேற்பில் இந்திய கம்யூனிஸ்ட் மக்கள்தாசன் சிபிஐ தொகுதி செயலாளர் தா.கிருஷ்ணன், திராவிட கழகம் மாவட்ட செயலாளர் கோ.நாத்திகன், விடுதலை சிறுத்தை மாவட்ட செயலாளர் பொறியாளர் பா.சாமுவேல் எபினேசர், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழக பகுதி செயலாளர் துரை மணிவண்ணன், ஆகியோரின் முன்னிலையில் திராவிட கழகத் தலைவர் தமிழர் தலைவர் மானமிகு ஆசிரியர் கி.வீரமணி ஐயா அவர்கள் தலைமையேற்று நிறைவு உரை வழங்கினார் மேலும் திராவிட முன்னேற்றக் கழக அமைப்பு செயலாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.எஸ்.பாரதி, இந்திய கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் தாமரை இதழ் ஆசிரியர் சி.மகேந்திரன், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, தாம்பரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தலைமை தீர்மான குழு செயலாளர் மீ.அ.வைத்தியலிங்கம், மனிதநேய மக்கள் கட்சியின் மாநில துணைப் பொதுச் செயலாளர் மாமன்ற உறுப்பினர் எம்.யாக்கூப், தாம்பரம் மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், திராவிட கழக மாநில ஒருங்கிணைப்பாளர் வி.பன்னீர்செல்வம், உள்ளிட்ட அனைத்து கட்சி பிரமுகர்கள் முக்கியஸ்தர்கள் சமூக ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொண்டனர் மேலும் இந்த நிகழ்ச்சியில் திராவிட முன்னேற்றக் கழக தலைமை செயற்குழு உறுப்பினர் மாணமிகு கல்வியாளர் ஆதிமாறன் அவர்கள் நன்றி உரையாற்றினார்








■ இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் சிறப்பு தீவிரத் திருத்தம் (Special Intensive Revision Phase -II) தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) திரு.சா.புகாரி அவர்கள் உள்ளார்.

# பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் 118ஆவது பிறந்த நாள் விழா: தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் அமைந்துள்ள தேவர் நினைவிடத்தில் மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்துகிறார்

சென்னை, அக்.30-

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 118ஆவது பிறந்த நாள் மற்றும் குருபூஜையை முன்னிட்டு, இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் அமைந்துள்ள அவருடைய நினைவிடத்தில் 30.10.2025 அன்று காலை 9.30 மணியளவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டு மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

அதே நேரத்தில், சென்னை, அண்ணா சாலை, நந்தனம் சந்திப்பில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு 30.10.2025 அன்று காலை 9.30 மணியளவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அனைவரும் மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் கிராமத்தில் உக்கிரப்பாண்டி தேவர் இந்திராணி தம்பதியினர் மகனாக 30.10.1908 அன்று பிறந்தார். சிறு வயதிலேயே பெற்ற தாயினை இழந்தார். பின்பு, இஸ்லாமியத் தாய் ஆயிஷா பீவி அம்மாள் அவர்களால் வளர்க்கப்பட்டார். இதனால் இஸ்லாமிய மக்களிடையே அளவற்ற அன்பும் பாசமும் கொண்டிருந்தார்.

தமது சிறு வயது முதல் அந்நியர்களின் ஆதிக்கத்தை எதிர்க்கத் தொடங்கினார். அந்நிய நாட்டின் அடிமைத் தனத்திற்கு ஆட்பட்ட அடித்தட்டு மக்களின் அன்றாட வாழ்க்கை போராட்டமாக இருந்ததைக் கண்ட தேவர் பெருமகனார், அம்மக்களின் வாழ்வு மேம்படத் தம்மையே அர்ப்பணிக்கத் தொடங்கினார்.

1933ஆம் ஆண்டு முதன் முறையாக, சாயல்குடியில் உள்ள விவேகானந்தர் வாசக சாலையில் எவருமே எதிர்பாராத வகையில், சுவாமி விவேகானந்தரைப் பற்றி மூன்று மணிநேரம் ஆற்றிய சொற்பொழிவே தேவர் பெருமகனாரின் பொதுவாழ்வில் திருப்புமுனையாக அமைந்தது.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் ஆங்கிலேய அரசை எதிர்த்துப் போராட, சுதந்திரப் போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தலைமையில் உருவாக்கப்பட்ட இந்திய தேசிய ராணுவத்திற்கு, தமிழகத்தில் இருந்து பெரும் படையினைத் திரட்டி அனுப்பினார். தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பல மணி நேரம் உரையாற்றிடும் தேவர் திருமகனார் அவர்கள் இஸ்லாமிய மக்கள் மீது, அளவற்ற பற்றும் பாசமும் மிகுந்த மரியாதையும் கொண்டிருந்த காரணத்தினால், இந்தியா பாகிஸ்தான் பிரிவினையின்போது தமிழ்நாட்டில் வாழும் இஸ்லாமிய மக்கள் தம் தாய்த் தமிழகத்தை விட்டுப்போக வேண்டாம் என்று அன்புடன் கேட்டுக் கொண்டார்.

1920 ஆம் ஆண்டு மெட்ராஸ் மாகாணத்தில் இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் நடைமுறையில் இருந்த குற்றப்பரம்பரை சட்டத்திற்கு எதிராக முதன் முதலில் போராடி, அச்சட்டத்தினை அகற்றினார். 1937ஆம் ஆண்டு நீதிக்கட்சி சார்பில் நடைபெற்ற மாகாணத் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்றார். இதனைத் தொடர்ந்து, 1939 ஆம் ஆண்டு ஜூன் 22 அன்று அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் கட்சியை நிறுவி, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களுடன் இணைந்து செயல்பட்டார்.

மேலும், "நேதாஜி" என்ற வாரப் பத்திரிகையைத் தொடங்கி, அதன் ஆசிரியராகவும் பணியாற்றினார். 1952ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஃபார்வர்டு பிளாக் கட்சி சார்பில் அருப்புக்கோட்டை பாராளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்றார். பின்னர், நடைபெற்ற முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்று அடித்தட்டு மக்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதன் மூலம், அனைத்துத் தரப்பு மக்களிடையேயும் மிகுந்த வரவேற்பை பெற்றார்.

தேசியமும், தெய்வீகமும் எனது இரு கண்கள் என்று வீரமுழக்கமிட்ட பசும்பொன் தேவர் திருமகனார் ஆன்மீகம், தேசியம், பொதுவுடைமை, ஏகாதிபத்திய எதிர்ப்பு, சாதி எதிர்ப்பு ஆகிய முக்கியக் கொள்கைகளைத் தமது வாழ்நாளில் இறுதிவரை பின்பற்றினார். பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் சிறந்த பேச்சாற்றல் கொண்டவர். ஆங்கிலத்திலும் சிறந்த புலமையும் கொண்டிருந்தார். ஆன்மீகத்தில் தேவர் கொண்டிருந்த ஞானம், ஆன்மீகச் சொற்பொழிவு இவற்றால் தேவர் "தெய்வத் திருமகன்" என்று போற்றப்பட்டார். இப்படி அரசியலிலும், ஆன்மீகத்திலும் பெருமைக்குரியவராகத் திகழ்ந்த பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் 30.10.1963 அன்று மறைந்தார்.


2007 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக் காலத்தில், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் நூற்றாண்டு விழா சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் அவர் வாழ்ந்த இல்லம் புனரமைக்கப்பட்டு நூற்றாண்டு தோரண வாயில் அமைக்கப்பட்டு, புகைப்படக் கண்காட்சிக் கூடம், அணையா விளக்கு, புதிய நூலகக் கட்டடம், முளைப்பாரி மண்டபம், முடி காணிக்கை மண்டபம் அமைக்கப்பட்டன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தேவர் சமுதாய மக்கள் பயன் பெறும் வகையில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயரில் நெல்லை மாவட்டம் மேல்நீலிதநல்லூர், இராமநாதபுரம் மாவட்டம் கமுதி, மதுரை மாவட்டம் உசிலம்பட்டி ஆகிய மூன்று இடங்களில் அரசு கல்லூரிகள், மதுரை மாநகரில் மிக உயரமான பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலை முதலியவற்றை அமைத்துத் தேவர் பெருமகனாருக்குப் பெருமைகள் சேர்த்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் உள்ள முத்துராமலிங்கத் தேவர் நினைவிடத்தில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகத் தமிழ்நாடு அரசின் சார்பில், தெய்வீகத் திருமகனார் உ. முத்துராமலிங்கத் தேவர் அரங்கம் புதிதாக அமைத்து, 28.10.2024 அன்று திறந்து வைத்து சிறப்பித்தார்கள்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் பிறந்ததும் மறைந்ததும் அக்டோபர்த் திங்கள் 30ஆம் நாள் ஆகும். எனவே, தேவர் திருமகனாரின் ஜெயந்தியும், குருபூஜையும் பசும்பொன்னில் ஒரே நாளில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

# முதலமைச்சர் கோப்பைக்கான மாநிலஅளவில் நடைபெற்ற சதுரங்க போட்டியில் வெற்றிபெற்ற மாணவிக்கு ஆணையாளர் சித்ரா விஜயன் பாராட்டு




மதுரை, அக்.30-

மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவில் நடைபெற்ற சதுரங்க போட்டியில் வெற்றிபெற்ற சுந்தரராஜபுரம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி மாணவி எஸ்.சஹானா மதுரை மாநகராட்சி ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன், இ.ஆ.ப., அவர்களை 28.10.2025 அன்று சந்தித்து வாழ்த்து பெற்றார்.

தமிழக அரசால் முதலமைச்சர் கோப்பைக்கான பல்வேறு விளையாட்டு போட்டிகள் மாநில அளவில் நடத்தி வருகிறது. மதுரை மாவட்ட அளவில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் சுந்தரராஜபுரம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி மாணவி எஸ்.சஹானா கலந்துக்கொண்டு முதல் பரிசு பெற்று மாநில அளவிலான போட்டிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு சேலத்தில் நடைபெற்ற மாநில அளவிலான போட்டியிலும் முதல் பரிசு பெற்று ரூ.1,00,000 பரிசுத் தொகையையும் பெற்றுள்ளார். அம்மாணவி மதுரை மாநகராட்சி பள்ளிகளுக்கு பெருமை சேர்ந்துள்ளார். வெற்றிபெற்ற அம்மாணவியின் திறமையை பாராட்டும் வகையில் மற்றும் ஊக்குவிக்கும் நோக்கத்துடன் மதுரை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாநகராட்சி பள்ளிகளுக்கான கல்வி மதிப்பாய்வு கூட்டத்தில் வெற்றி பெற்ற மாணவி எஸ்.சஹானாவிற்கு சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாணவர் களின் கல்வி முன்னேற்றம், தேர்வு முடிவுகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்து விரிவாக மதிப்பாய்வு செய்யப்பட்டது. கற்றல் முன்னேற்றம் தேவைப்படும் மாணவர்களுக்கு சிறப்பு வகுப்புகள் ஏற்பாடு செய்யவும், அரும்பு நிலை மாணவர்களின் எண்ணிக்கையை குறைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், திறன் (THIRAN) திட்டத்தின் கீழ் உள்ள மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக தலைமை ஆசிரியர்கள் மற்றும் வகுப்பு ஆசிரியர்கள் இணைந்து செயல் திட்டம் வகுக்கவும், கல்வி தொடர்ச்சியில் இடைநிறுத்தம் ஏற்படும் வாய்ப்புள்ள மாணவர்களை (Potental Dropout) அடையாளம் கண்டு, கல்வியை தொடர நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப் பட்டது. NEET, ஜெர்மன் மொழி மற்றும் IIT School Contest போன்ற திட்டங்களில் மாணவர்கள் முழுமையாக பங்கேற்பதை உறுதிசெய்யுமாறும், பள்ளி வளாக பராமரிப்பு, மின்சார வசதி, முதலமைச்சரின் காலை உணவு திட்டம், மதிய உணவு திட்டம் மற்றும் ஹை.டெக்.லேப் பயன்பாடுகள் குறித்து ஆலோசிக் கப்பட்டது. சிறப்பு தேவைகள் கொண்ட மாணவர்களுக்கு தேவையான உதவிகள் வழங்கப்படுதல் மற்றும் மாணவர்கள், ஆசிரி யர்கள் ஆன்லைன் வருகைப் பதிவை முறை யாகப் பின்பற்றுதல் குறித்து, இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கல்விக்குழு தலைவர் திரு.ரவிச்சந்திரன், துணை ஆணையாளர் திரு.ஜெய்னுலாப்தீன், கல்வி அலுவலர் திரு.ஜெய்சங்கர் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



# அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை - கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு

கன்னியாகுமரி, அக்.30-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை துவக்கி வைத்ததைத்தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், சுசீந்திரம் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட செல்வம் திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள், நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலன் கருதி, உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் பொதுமக்களின் இருப்பிடத்திற்கே சென்று மக்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதேயாகும். எனவே தொடர்புடைய அலுவலர்கள் தனிகவனம் செலுத்தி மக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து, அதனை நிவர்த்தி செய்ய தேவையான நடவடிக்கைகளை உடனுக்குடன் மேற்கொள்ள வேண்டும் என துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

அதனடிப்படையில் இன்று அகஸ்தீஸ்வரம் வட்டம், சுசீந்திரம் பேரூராட்சிக்குட்பட்ட 1 முதல் 5, 8 மற்றும் 9 வரையிலான வார்டு பகுதி பொதுமக்களுக்கு செல்வம் திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து பொதுமக்களை அவர்களின் கோரிக்கைக்கு தொடர்புடைய துறைகள் உள்ள அரங்குக்கு அழைத்துச் சென்று முறையாக வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகின்றதா என்றும், பெறப்படும் மனுக்கள் உடனுக்குடன் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகின்றதா என்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் நடைபெறவுள்ள முகாம்களில் பொதுமக்கள் தங்களுக்கு தேவையான திட்டங்களில் இணைந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்தார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

### வடகிழக்குப் பருவமழை காலத்தில், பேரிடர் குறித்த வானிலை முன்னெச்சரிக்கை தகவல்களை

# TN-ALERT மற்றும் SACHET ஆகிய செயலிகள் வாயிலாக பொதுமக்கள் அறிந்து கொண்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்

### மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்



சிவகங்கை, அக்.30-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் கடந்த 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் தேதியன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற வடகிழக்குப் பருவமழை தொடர்பான ஆய்வுக்கூட்டத்தில், வானிலை முன்னெச்சரிக்கை தொடர்பான TN-ALERT என்ற செயலி குறித்து அறிவித்ததைத் தொடர்ந்து, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு மேற்கண்ட செயலியும் தொடங்கி வைக்கப்பட்டது.

TN-ALERT செயலியில், நம் இருப்பிடம் சார்ந்த வானிலை மற்றும் முன்னெச்சரிக்கை தகவல்களை, பொதுமக்கள் தமிழிலேயே அறிந்து கொள்ளலாம். மேலும், அடுத்த 4 நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு, மழைமானி வாரியாக தினசரி பெறப்பட்ட மழையளவு, நீர்தேக்கங்களில் தற்போதைய நீர் இருப்பு விபரம், தங்களது இருப்பிடம் வெள்ள அபாயத்திற்கு உட்பட்டதா என்பதை அறியும் வசதியும் இச்செயலியில் உள்ளது.

மேலும், பேரிடர் குறித்த வானிலை முன்னெச்சரிக்கையை அறிந்து கொண்டு, அதற்கேற்ப பொதுமக்கள் ஆயத்த நடவடிக்கை மேற் கொள்ள அடிப்படையாக உள்ள TN-ALERT மற்றும் SACHET ஆகிய செயலிகளை Google play store மற்றும் IOS play store மூலமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

அதுமட்டுமன்றி, பேரிடர் மற்றும் கனமழை காரணமாக பாதிப்புக்குள்ளாகும் மக்கள், தங்கள் புகார்களை பதிவு செய்ய மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கி வரும் இலவச கட்டணமில்லாத் தொலைபேசி எண்களான "1077" மற்றும் 04575 246233 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டும் புகார்களை தெரிவிக்கலாம்.

எனவே, பொதுமக்கள் இச்சேவைகளை பயன்படுத்திக் கொண்டு, வடகிழக்கு பருவமழை காலங்களில் முன்னெச்சரிக்கை அறிவுரைகளை முறையாக பின்பற்றிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.

# மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் செய்தி குறிப்பில் தெரிவித்ததாவது



இராமநாதபுரம், அக்.30-

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்ட விதிகளின்படி, ஒவ்வொரு ஆண்டும் 01.11.2025 உள்ளாட்சிகள் தினத்தன்று அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக்கூட்டம் நடைபெற வேண்டுமென வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி 01.11.2025 அன்று காலை 11.00 மணியளவில் அனைத்து கிராம ஊராட்சிகளிலும், உரிய வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடித்து கிராம சபைக் கூட்டம் நடத்திட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்த கிராம சபைக் கூட்டத்தில் 1) கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதித்தல், 2) கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கை, 3) ஊரகப் பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல், 4) கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல், 5) வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல், 6) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம். 7) அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்ஜஜ 8)தூய்மை பாரத இயக்க (ஊரகம்) திட்டம். 9) இதர பொருட்கள் குறித்து கிராம சபையில் விவாதித்திட அரசு தெரிவித்துள்ளபடியால் பொதுமக்கள் தாமாகவே முன்வந்து இந்த கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்கள் கருத்துகளை பதிவு செய்யுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# பாரத பிரதமரின் கவுரவ நிதி உதவி பெற விவசாயிகளுக்கு தனித்துவ அடையாள அட்டை அவசியம்

### மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்துள்ளார்

கடலூர், அக்.30-

பாரத பிரதமரின் கவுரவ நிதி உதவி திட்டத்தின் கீழ், கடலூர் மாவட்டத்தை சேர்ந்த 79,469 விவசாயிகளுக்கு, 4 மாதங்களுக்கு ஒருமுறை ரூ.2 ஆயிரம் வீதம் ஆண்டுக்கு ரூ. 6 ஆயிரம் ஒன்றிய அரசால் நிதிஉதவி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 20 தவணைகளில் உதவித் தொகை வழங்கப்பட்டு உள்ளது. 21வது தவணை உதவித்தொகை பெற, தனித்துவ விவசாய அடையாள அட்டையில் (Farmer Registry) பதிவு செய்வது கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது.

கடலூர் மாவட்டத்தில் கவுரவ நிதிஉதவி பெறும் விவசாயிகளில், இதுவரை 62095 விவசாயிகள் மட்டுமே பதிவு செய்துள்ளனர், மீதமுள்ள 17,374 பேர் தனித்துவ அடையாள அட்டை பெறாமல் உள்ளனர். நவம்பர் 2025ம் மாத தொடக்கத்தில், 21 வது தவணை பெறுவதற்கு, விவசாயிகள் விரைவாக தனித்துவ விவசாய அடையாள எண் பெற வேண்டியது கட்டாயம்.

எனவே, விவசாயிகள் தங்களது பகுதி வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலர்களை தொடர்பு கொண்டோ அல்லது பொது சேவை மையத்தின் மூலமோ, தங்களது சிட்டா, ஆதார் எண், ஆதாருடன் இணைக்கப்பட்டுள்ள கைப்பேசி எண் உடன் சென்று உடனடியாக பதிவு செய்து, தனித்துவ அடையாள அட்டை பெற்று, பிரதமரின் கௌரவ நிதி உதவி தொகை 21வது தவணை பெறுவதை உறுதிபடுத்த கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், முன்னோர்கள் பெயரில் பட்டா உள்ள விவசாயிகள், தங்களது பெயரில் சிட்டா பெற்று, அதனுடன் ஆதார் எண்ணை இணைத்து பதிவு செய்து, தனித்துவ விவசாய அடையாள அட்டை பெற்றால் மட்டுமே வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை மூலம் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் தொடர்ந்து கிடைக்கும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்



கே.வி.குப்பம் மற்றும் குடியாத்தத்தில் பருவ மழையால் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதிகளில்

## எம்.எல்.ஏ. ஜெகன்மூர்த்தி பார்வையிட்டு, மக்களிடம் கனிவுடன் ஆறுதல் தெரிவித்து நடவடிக்கை எடுக்க உறுதியளிப்பு

வேலூர், அக்.30-

வேலூர் மாவட்டத்தில் கடந்த வாரத்திலிருந்து வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்து வருவதால் வேலூர் மாவட்டம், குடியாத்தம், கே.வி.குப்பம் சட்டமன்ற தொகுதியான நெல்லூர் பேட்டை ஊராட்சி லிங்கு ன்றம் கிராம சுற்று வட்டார பகுதிகளில், மோர்தனா அணை கால்வாய் உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் குடியிருப்பு பகுதிகளில் நுழைந்தது அதனை தொடர்ந்து கே.வி.குப்பம் சட்டமன்ற உறுப்பினர் ஜெகன்மூர்த்தி கிராம பகுதிகளில் பார்வையிட்டு ஆய்வு செய்து பொதுமக்களிடம் கோரிக்கை மனுவை பெற்றுக் கொண்டு எம்.எல்.ஏ. ஜெகன் மூர்த்தி மக்களின் சந்தித்து கனிவுடன் உரையாடி ஆறுதல் தெரிவித்து, இது சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தனர். இந்த ஆய்வின்போது குடியாத்தம் ஒன்றிய குழு துணை தலைவர் அருள் முரளி, நெல்லூர்பேட்டை ஊராட்சி துணை தலைவர் பிச்சாண்டி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தமிழ்செல்வி சந்திரசேகர், வார்டு உறுப்பினர் முல்லை நாகராஜ் புரட்சி பாரதம் கட்சியின் வேலூர் மாவட்ட செயலாளர் மேகநாதன், அ.தி.மு.க. ஒன்றிய கழகச் செயலாளர் எஸ்.எல். எஸ். வனராஜ், ஒன்றிய துணை செயலாளர் செ.கு.வெங்கடேசன், கொண்ட சமுத்திரம் ஊராட்சி மன்ற தலைவர் அகிலாண்டேஸ்வரி பிரேம்குமார், செருவங்கி ஊராட்சி மன்ற தலைவர் சாந்தி மோகன் மற்றும் புரட்சி பாரதம் கட்சியின் நிர்வாகிகள், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

## திருச்சி காரைக்குடி இராமேசுவரம் வரை" இரட்டைவழி ரயில் பாதையாக்க வேண்டும்

### இரயில் பயணிகள் சங்கம் வலியுறுத்தல்





காரைக்குடி, அக்.30-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் திருச்சி காரைக்குடி இராமேசுவரம் வரை இரட்டைவழி ரயில் பாதையாக்க வேண்டுமென இரயில் பயணிகள் சங்கம் வலியுறுத்தல், சங்கத் தலைவர் VR.இராமநாதன் (எ) மோகன் தலைமையுரையும், செயலாளர் A.கோவிந்தசாமி (எ )இராமு சென்ற கூட்டத்தின் தீர்மானங்களையும், பொருளாளர் A.இராம்குமார் MC, கணக்கு விபரங்களையும் பேசினார்கள். இந்நிகழ்வில் ECமெம்பர்கள் தேவகோட்டை மகபூப்பாட்சா, காரைக்குடி மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், ஹேமலதா தேவி MC, அமுதா MC ஆகியோர் கருத்துக்களை கூறினார்கள். மேலும் EC மெம்பர் S.சையது, அமைப்பாளர் S.கண்ணப்பன், ஆலோசகர் சாமிதிரா விடமணி, ஒருங்கி ணைப்பாளர் GTS.சத்தியமூர்த்தி உரையாற்றினார்கள். இக்கட்டத்தில், அரியக்குடி இலுப்பக்குடி வழியிலுள்ள ரயில்வே கேட்டில் பாலம் அமைத்தல், செட்டிநாடு, தேவகோட்டை ரஸ்தா நிலையங்களில் அனைத்து எக்ஸ். ரயில்களுக்கு நிறுத்தமும், பழைய கேட் அருகே சுரங்கப்பாதையும், மின்விளக்கு வெளிச்சம், வரம்அதிகப்படுத்தல், மாநகராட்சியானால் ஷேர் ஆட்டோக்களை இயக்கவும், திருச்சி காரைக்குடி இராமேசுவரம் வழியை இரட்டைவழிப் பாதைகளை அமைக்கவும், காரைக்குடி மதுரைக்கு புதிய ரயில் பாதை உருவாக்க வேண்டும் என கருத்துக்களை தெரிவித்தார்கள்.

செயலாளர் A.கோவிந்தசாமி இராமு நன்றி கூறினார்.



## வடகிழக்கு பருவ மழையால் பெரிதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, ஏ.கே டிஜிட்டல் நெட்வொர்க் மற்றும் ஏகே டிவி குழுமம் சார்பில் நிவாரண பொருட்கள், நலதிட்ட உதவிகளை வழங்கினர்.

வேலூர், அக்.30-

வேலூர் மாவட்டம், வேலூர் பழைய பைபாஸ் ரோடு, கன்சல்பேட் அருகே நிவாரண முகாம், வடகிழக்கு பருவ மழையால் பெரிதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, அரசின் சார்பில் முகாமில் தங்க வைத்துள்ள பொதுமக்களுக்கு, ஏகே டிஜிட்டல் நெட்வொர்க், ஏகே டிவி குழுமம் மற்றும் ரோட்டரி கிளப் காட்பாடி சார்பில், பாரதிய ஜனதா கட்சி பட்டியல் அணி தலைவரும், ரோட்டரி கிளப் காட்பாடி பப்ளிக் இமேஜ் சேர்மன், ஏ.கே.டிவி நிறுவன தலைவருமான டாக்டர். எம். சரவணகுமார் தலைமையில் நிவாரண பொருட்கள் டுத் பேஸ்ட், பிரஸ், சோப்பு, நலதிட்ட பொருட்கள் சேலை, லுங்கி, உணவுப் பொருட்கள் குடிநீர், தேநீர், பிஸ்கட், பிரட் பண்ணு, அரிசி உள்ளிட்ட நலதிட்ட பொருட் களை வழங்கினர்.

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக பாரதிய ஜனதா கட்சியின் மாநில பொதுச் செயலாளர் கார்த்தியாயினி மற்றும் பாஜக வேலூர் மாவட்ட தலைவர் தசரதன், மாநில செயற்குழு உறுப்பினர் இளங்கோவன் (கலைமகள்), ஆகியோர் கலந்துகொண்டு நிவாரணப் பொருட்களையும், நலதிட்டங்களையும் வழங்கி சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் ரோட்டரி கிளப் ஆப் காட்பாடி தலைவர் ரிஸ்வான், செயலாளர் பிரவீன், பாஜக மாநில பொறுப்பாளர் ஜடிக்கு நந்தகுமார், மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட துணைத் தலைவர் சக்கரவர்த்தி, ரமேஷ் பாண்டியன், சோசியல் மீடியா விக்னேஷ், உறுப்பினர்கள் மற்றும் ஏ.கே. குழும அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்த சேவை குறித்து பொதுமக்கள் மற்றும் சமூக அலுவலர்கள், ஏ.கே.குழுமத்தை பாராட்டி வருகின்றனர்.

## வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்களுடனான ஆலோசனை கூட்டம்



கடலூர், அக்.30-

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்களுடனான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கையில்,

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, கடலூர் மாவட்டத்தில் 01.01.2026-ஐ தகுதி நாளாக கொண்டும், 2002ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலை அடிப்படையாகக் கொண்டும், வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தம், 2026 தொடர்பான பணிகள் 28.10.2025 முதல் மேற்கொள்ளப்படவுள்ளது. கடலூர் மாவட்டத்தில் கடைசியாக 2002ஆம் ஆண்டு நடைபெற்றது.

மேற்படி, 2002 இல் நடைபெற்ற தீவிர திருத்த வாக்காளர் பட்டியலானது இந்திய தேர்தல் ஆணையத்தின் இணையதளம் (https://erolls.tn.gov.in/Rollpdf/SIR_2002.aspx) மற்றும் கடலூர் மாவட்டத்தின் அதிகாரப்பூர்வ இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

வருகின்ற 28.10.2025 முதல் 03.11.2025 வரை கணக்கெடுப்பு படிவம் அச்சிடுதல் மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கான (ஙிலிளி) பயிற்சியும், 04.11.2025 முதல் 04.12.2025 வரை வீடு வீடாக சென்று வாக்காளர்களிடம் கணக்கெடுப்பு படிவம் வழங்கி பூர்த்தி செய்து பெறுதல் 09.12.2025 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். அதனைதொடர்ந்து 09.12.2025 முதல் 08.01.2026 வரை உரிமைகோரல்கள் மற்றும் ஆட்சேபனைகள் பெறப்படும். 09.12.2025 முதல் 31.01.2026 வரை பெறப்பட்ட ஆட்சேபனைகள் மீது விசாரணை மற்றும் சரிபார்ப்பு பணிகள் மேற்கொள்ளப்படும். பின்னர் 07.02.2026 அன்று இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும்.

இதன் மூலம் வாக்காளர் பட்டியலில் இருந்து தகுதியான எந்த நபரும் விடுபடவில்லை என்பதை உறுதி செய்தல், அதே நேரத்தில் வாக்காளர் பட்டியலில் தகுதியற்றவர்கள் யாரும் இல்லை என்பதை உறுதி செய்யப்படும்.

கணக்கெடுப்பு பணியானது வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ள அனைத்து வாக்காளர்களுக்கும் கணக்கெடுப்பு படிவம் 04.11.2025ஆம் தேதி முதல் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் (BLO) வீடு வீடாகச் சென்று வழங்கப்பட்டு, வாக்காளர்களால் கையொப்பமிடப்பட்ட கணக்கெடுப்பு படிவத்தை வாக்காளர்களிடமிருந்து திரும்பப் பெறப்பட உள்ளது. முகவரியில் இல்லாத, இடம் பெயர்ந்த மற்றும் இறந்த வாக்காளர்களை வாக்குச் சாவடி நிலை அலுவலர்களால் (BLO) அடையாளம் காணப்பட்டு, தலைமைத் தேர்தல் அலுவலர் அவர்களின் இணையதளம் மற்றும் அரசு பொதுத்துறை அலுவலகங்களில் ஒட்டப்படும். முந்தைய சிறப்பு தீவிர திருத்தம் 2002 இல் ஒப்பிட்டு பொருந்தாத வாக்காளர்களுக்கு வாக்காளர் பதிவு அலுவலர்களால் அறிவிப்பு வெளியிடப்படும்.

மேலும், வீடு வீடாக வழங்கப்பட்ட கணக்கெடுப்பு படிவத்தினை பூர்த்தி செய்வதில், வாக்காளர்களுக்கு ஒத்துழைப்பு நல்க வாக்குச் சாவடி நிலை அலுவலர்களுக்கு (BLO) அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், கணக்கெடுப்பு பணியின் போது புதிய வாக்காளர்களை சேர்க்க படிவம் - 6 மற்றும் அறிக்கை படிவம் (Declaration Form) வாக்குச் சாவடி நிலை அலுவலர்களால் (BLO) பெறப்பட உள்ளது.

மேற்படி கணக்கெடுப்பு படிவத்தினை பூர்த்தி செய்வதில் வாக்குச்சாவடி நிலை முகவர்களும் (BLA-2) வாக்காளர்களுக்கு ஒத்துழைப்பு நல்க கேட்டுக் கொள்ளப்படுகிறது. வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் (BLO) தங்கள் பாகங்களுக்கு செல்ல உள்ள பயண அட்டவணை பற்றி முன்கூட்டியே வாக் காளர்களுக்கு தெரிவிக்கப்படும். கணக்கெடுப்பு படிவம் பெறப்பட்ட அனைத்து வாக்காளர்களின் பெயர்களும் வரைவு வாக்காளர்களின் பட்டியலில் இடம் பெறும்.

இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிட்டப்பின் இது தொடர்பாக வாக்காளர் பதிவு அலுவலர்களுக்கு எதிராக முதல் மேல்முறையீடு மாவட்ட தேர்தல் அலுவலர் ஆவார். மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்களுக்கு எதிராக இரண்டாம் மேல்முறையீடு தலைமைத் தேர்தல் அலுவலரிடம் தெரிவிக்கலாம். இப்பணிக்கு அனைத்து அங்கீக ரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் மற்றும் வாக்காளர்கள் ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திருநாவுகரசு, வட்டாட்சியர் (தேர்தல்) சுரேஷ் குமார் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

## ஆசிரியர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய 3% சதவீத அகவிலைப்படி உயர்வை தமிழ்நாடு முதல்வர் வழங்க வேண்டும்

### தமிழ்நாடு தமிழாசிரியர் சங்கம் கோரிக்கை

ஆசிரியர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய 3% சதவீத அகவிலைப்படி உயர்வை தமிழ்நாடு முதல்வர் வழங்க வேண்டும் எனத் தமிழ்நாடு தமிழாசிரியர் சங்கம்

கோரிக்கை விடுத்துள்ளது. இது குறித்து மாநிலப் பொதுச் செயலர் இளங்கோ கூறியதாவது:

மத்திய அரசு ஜூலை 01 (01.07. 2025) முதல் மத்திய அரசு ஊழியர்களுக்கு 55% சதவீதத்தில் இருந்து 58% சதவீதமாக, 3% அகவிலைப்படி உயர்த்தி அறிவித்துள்ளது. மத்திய அரசு அகவிலைப்படி உயர்வு அறிவித்து மூன்று மாதங்கள் கடந்து விட்ட பிறகும் கூட இன்று வரை மாநில அரசு அகவிலைப்படி உயர்வை அறிவிக்காதது தமிழ்நாடு அரசு ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் ஏமாற்றமளிக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 17.05.2023 அன்று வெளியிட்டுள்ள செய்தியில், ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் அகவிலைப்படி உயர்வை 38 % சதவிதத்தில் இருந்து 42 %சதவீதமாக உயர்த்தி வழங்க உத்தரவிட்டார். அதோடு அல்லாமல் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வரும் கோரிக்கைகளைப் பரிசீலித்து எதிர்வரும் காலங்களில் ஒன்றியஅரசு அகவிலைப்படி உயர்வை அறிவிக்கும் போதெல்லாம் உடனுக்குடன் தமிழ்நாடு அரசும் அதைப் பின்பற்றி அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி உயர்வை அறிவிக்கும் என்று அறிவித்து இருந்தார்.

மத்திய அரசு 01.07.2025 முதல் மத்திய அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படியை 55% சதவீதத்திலிருந்து 58% உயர்த்தி வழங்கி உள்ளது.

தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு, ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி உயர்வுவை வழங்கும் என்று ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் எதிர்பார்த்து வருகின்றனர். இன்று வரை அகவிலைப்படி உயர்வு அறிவிக்கப்படாதது ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கு ஏமாற்றம் அளிக்கிறது. தமிழ்நாடு முதல்வர் ஆசிரியர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் உடனடியாக அகவிலைப்படி உயர்வை அறிவிக்க வேண்டும் என தமிழ்நாடு தமிழாசிரியர் சங்கத்தின் சார்பாக கேட்டுக் கொண்டார்கள்.



■ மேதகு தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகை தந்ததையொட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா கன்னியாகுமரி அரசு விருந்தினர் மாளிகையில் மரியாதை நிமித்தமாக சந்தித்து பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்கள்.





■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி 14வது வார்டில் சிறப்பு சபா கூட்டம் 14வார்டு கவுன்சிலர் சதீஷ்குமார் தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் இறுதிச்சடங்களுக்கான குளியல் தொட்டி கொடிக்கால் மேற்கு தெரு நடைபாதையில் மக்கள் செல்லும் பாதையில் அமைந்துள்ள சின்டெக்ஸ் மாற்று இடத்திற்கு அமைக்க கோரிக்கை சிதலமடைந்த மழை நீர் கால்வாய் புதிதாக சீரமைக்க 200 மீட்டர் அளவில் அமைத்து தர தீர்மானம் நிறைவேற்றப்பட்டது..




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161